# October 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தனது 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் ஒரு பங்கு இலவசமாக வழங்கப்படும் என்று அந்நாட்டைச் சேர்ந்த பெரும் கோடீஸ்வரரும், தொழிலதிபருமான எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

(i) அமெரிக்காவின் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) நிறுவனமான ஆந்த்ரோபிக் அண்மையில் சமூக மேம்பாட்டு நிதியாக நிறுவனத்தின் 5 சதவீத பங்குகளை ஒதுக்குவதாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து எலான் மஸ்க் தனது சார்பில் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

(ii) ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஒரு பங்கின் தற்போதைய மதிப்பு 146.03 அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பு சுமார் ரூ.14,000) ஆகும். ஆந்த்ரோபிக் மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பங்கு அடுத்து வரும் ஆண்டுகளில் பலமடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இது பங்குகளை இலவசமாகப் பெறும் அனைத்துக் குழந்தைகளுக்கும் எதிர்காலத்தில் சிறப்பான செல்வத்தை வழங்கும்.

(iii) அதே நேரத்தில், 2021-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆந்த்ரோபிக் நிறுவனம் அடுத்த மாதம் அனைத்துத் தரப்பினரும் தங்கள் பங்குகளை வாங்கும் வகையில் பொதுப் பங்கு வெளியீட்டை மேற்கொள்ள இருக்கிறது. இதற்காக தங்கள் நிறுவனத்தை விளம்பரப்படுத்திக் கொள்ளும் முயற்சி என்றும் ஒரு தரப்பினர் விமர்சித்துள்ளனர்.

2. பிரான்ஸில் மேலும் கலவரம், கொள்ளை சம்வங்கள் நடைபெறுவதைத் தடுக்க, குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு தெரிவித்துள்ளார்.

(i) பிரான்ஸில் விலைவாசி உயர்வு அதிகரிப்பு, பள்ளிகள் மோசமாக இருத்தல் உள்ளிட்ட பிரச்னைகளுக்கு எதிராக, கடந்த சனிக்கிழமை நாடு முழுவதும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பெரும் வன்முறை ஏற்பட்டது.

(ii) இதைத் தொடர்ந்து அங்குள்ள பாரீஸ், லியோன், மார்செய் உள்ளிட்ட நகரங்களில், சில கும்பல்கள் வீதிகளில் இருந்த மிதிவண்டிகள், குப்பைத் தொட்டிகள் உள்ளிட்டவற்றுக்கு தீ வைத்து கடைகளில் கொள்ளையடித்தன. இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக நாடு முழுவதும் சுமார் 2,400 பேர் கைது செய்யப்பட்டனர்.

(iii) வன்முறையின்போது பல்வேறு நகரங்களில் சுமார் 3,000 கடைகள் சேதப்படுத்தப்பட்டன அல்லது கொள்ளையடிக்கப்பட்டன என்று காவல் துறையினர் தெரிவித்தனர். இதையடுத்து அங்குள்ள பாரீஸ், லில், நீஸ் உள்ளிட்ட நகரங்களின் சில இடங்களில் ஊரடங்குப் பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக அங்கு அமைதி நிலவியது.

3. சவூதி அரேபியாவுக்கு தேவையான அனைத்து வகையான உதவிகளையும் பாகிஸ்தான் வழங்கும் என்று அந்நாட்டு ராணுவம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

(i) யேமனில் செயல்படும் ஹூதி கிளர்ச்சியாளர்கள் சவூதியில் விமான நிலையங்கள், கச்சா எண்ணெய் ஆலைகள் உள்ளிட்டவற்றைக் குறிவைத்து தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

(ii) இந்நிலையில், இஸ்லாமாபாதில் செய்தியாளர்களைச் சந்தித்த பாகிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் ஜெனரல் அகமது ஷெரீப் சௌதரிகூறுகையில், 'சவூதி அரேபியாவின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு, அங்குள்ள புனிதத் தலங்கள், முக்கியமாக இரு புனித மசூதிகளைக் காக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் பாகிஸ்தான் வழங்கும்' என்றார்.

(iii) பாகிஸ்தான்-துருக்கி-சவூதி அரேபியா ஆகியவை கடந்த ஆகஸ்ட் மாதம் முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டன. இதில் ஒரு நாடு தாக்கப்பட்டாலும் மற்ற இரு நாடுகளும் ராணுவம் உள்பட அனைத்து வகையிலும் உதவ வேண்டும் என்பது முக்கிய அம்சமாகும்.

4. ஜப்பானில் நடைபெறும் 5-ஆவது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில், இந்தியர்கள் பதக்கம் குவித்து வருகின்றனர். பதக்கப் போட்டிகளின் 2-ஆவது நாளான செவ்வாய்க்கிழமை, இந்தியாவுக்கு 5 தங்கம், 5 வெள்ளி, 12 வெண்கலம் என, ஒரே நாளில் 22 பதக்கங்கள் கிடைத்தன. பட்டியலில் இந்தியா மொத்தமாக 35 பதக்கங்களுடன் 6-ஆவது இடத்தில் இருக்கிறது. டேபிள் டென்னிஸ் ஸ்டாண்டிங் பிரிவில் இந்தியாவுக்கு பதக்கம் வென்ற முதல் இந்தியர்களாக, தமிழகத்தின் பேபி சஹானா, பிராச்சி பாண்டேயும், ஒரே ஆசிய போட்டிகளில் 2 தங்கம் வென்ற 3-ஆவது இந்தியராக தடகள வீரர் நிஷாத் குமாரும் சாதனை படைத்தனர்.

5. பயங்கரவாத செயல்களுக்கு எவ்வித நியாயமும் கற்பிக்க முடியாது; அதை எதிர் கொள்வதில் இரட்டை நிலைப்பாடு இருக்கக் கூடாது என்று தஜிகிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) கூட்டத்தில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

(i) தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் எஸ்சிஓ அமைப்பின் அரசுத் தலைவர்கள் குழுவின் 25-வது கூட்டம் இருநாள்கள் (அக்டோபர் 19,20) நடைபெற்றது.

(ii) 2026 முதல் 2030-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்துக்கான பலதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு செயல்திட்டத்துக்கு இந்தியா ஆதரவளிக்கிறது. நாடுகள் இடையே மேற்கொள்ளப்படும் (பாகிஸ்தான் - சீனா) எந்தவொரு தரை இணைப்புத் திட்டமும் அனைத்து நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளிப்பதுடன், சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்தாலோசித்தே முன்னெடுக்கப்பட வேண்டும்.

6.ஜம்மு-காஷ்மீர் நிலவரம் குறித்து இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (ஓஐசி) வெளியீட்ட தீர்மானத்தை இந்தியா நிராகரித்தது.

(i) இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத அங்கமாகும். ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 370 நீக்கப்பட்ட பின்னர் அங்கு சுற்றுலா, உள்கட்டமைப்பு மேம்பாடு எனப் பல்வேறு துறைகள் பொருளாதார ரீதியாக சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகின்றன.

(ii) ஆனால், பாகிஸ்தான் ஆக்கி ரமிப்பு காஷ்மீரில் வன்முறை, பொதுமக்களின் போராட்டங்களுக்கு எதிரான அடக்குமுறை, பெண்கள் மற்றும் குழந்தைகளை குறிவைத்து நிகழ்த்தப்படும் படுகொலைகள் என சூழல் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

(iii) ஊடகங்களில் இதுகுறித்த செய்திகள் வெளிவராமல் தடுத்தாலும் அப்பகுதி மக்களுக்கு எதிரான பாகிஸ்தானின் அடக்கு முறைகளை உலகின் கண்களில் இருந்து மறைக்க முடியாது.

(iv) இந்நிலையில், கடந்த அக்.17,18 ஆகிய தேதிகளில் இராக் தலைநகர் பாக்தாதில் நடைபெற்ற ஓஐசி கவுன்சிலின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஜம்மு-காஷ்மீர் நிலவரத்தை குறிப்பிட்டு இந்தியாவுக்கு எதிராக வெளியிடப்பட்ட தீர்மானத்தை ஒருதலை பட்சமாவும், பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாகவும் கருதி நிராகரிக்கிறோம். பாகிஸ்தானின் தவறான கொள்கையை ஓஐசி மீண்டும் ஒருமுறை அனுமதித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது.

(v) சட்டவிரோதமாக ஆக்கிரமித்த பகுதிகளை இந்தியாவிடம் பாகிஸ்தான் ஒப்படைப்பதும், எல்லை கடந்த பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டுவதுமே ஜம்மு-காஷ்மீரில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளாக உள்ளன.

(vi) சிறுபான்மையினருக்கு எதிரான படுகொலைகள் மற்றும் குழுக்களுக்கு இடையேயான வன்முறை என உள்நாட்டுப் பிரச்னைகளை திசைதிருப்பவே இந்தியா குறித்து பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகளை பாகிஸ்தான் கட்டவிழ்த்துவிடுகிறது.

(vii) தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான தீர்மானங்களை ஓஐசி அனுமதிப்பது அந்த அமைப்பு மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்குகிறது. ஓஐசி அமைப்பில் அதன் உறுப்பு நாடுகள் விரைவில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் என நம்புகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.இந்தியா – நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அமலுக்கு வந்தது

(i) ஒப்பந்தம் அமலுக்கு வந்தது மற்றும் உடனடி வர்த்தகப் பலன்கள்

- இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையே ஏப்ரல் 27-ஆம் தேதி கையெழுத்தான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement – FTA) செவ்வாய்க்கிழமை அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்த முதல் நாளிலிருந்தே, இந்தியாவிலிருந்து

ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் நியூசிலாந்து சந்தையில் 100 சதவீத வரி விலக்குடன் கூடிய அனுமதி வழங்கப்படுகிறது.

- தொழிலாளர் உழைப்பு அதிகம் தேவைப்படும் பொருள்களுக்கும் இந்த வரி விலக்கு பொருந்தும். இதன் மூலம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் (MSMEs) உடனடிப் பலன்கள் கிடைக்கும்.

(ii) கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் 7-ஆவது தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

கடந்த 5 ஆண்டுகளில் அமலுக்கு வந்த இந்தியாவின் 7-ஆவது தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இதுவாகும்.

இதற்கு முன்னதாக ஐக்கிய அரபு அமீரகம் (UAE), மொரீஷியஸ், ஐரோப்பிய தடையற்ற வர்த்தகக் கூட்டமைப்பு (EFTA) உறுப்பு நாடுகள், பிரிட்டன், ஓமன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் அமலுக்கு வந்துள்ளன.

(iii) பயனடையும் தொழில் துறைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள்

- ஜவுளி, ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள் மற்றும் காலணிகள், பொறியியல் உபகரணங்கள், வாகன உதிரிபாகங்கள், விலைமதிப்புள்ள கற்கள் மற்றும் நகைகள், வேளாண் பொருள்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், உற்பத்தித் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் துறைகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தனியார் துறையின் முதலீட்டு முடிவுகளைப் பொறுத்து, இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கான அந்நிய நேரடி முதலீட்டை (Foreign Direct Investment – FDI) ஈர்ப்பதற்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் எனத் தொழில் துறை வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(iv) உத்திசார் மற்றும் உலகளாவிய முக்கியத்துவம்

- இருதரப்பு வர்த்தகத்தைத் தாண்டி, இந்த ஒப்பந்தம் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் உத்திசார் நிலையை வலுப்படுத்துவதுடன், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தகக் கட்டமைப்பையும் விரிவுபடுத்துகிறது.
- உலகளாவிய வர்த்தகத்தில் நிலையற்ற தன்மை அதிகரித்து வரும் சூழலில், இந்த ஒப்பந்தம் திறந்த சந்தைகள் மற்றும் கணிக்கக்கூடிய வர்த்தக விதிமுறைகளை உறுதிப்படுத்தும் நம்பகமான கட்டமைப்பை உருவாக்குகிறது.

8. கால்நடைகள் வளர்ப்பு மற்றும் மேம்பாட்டை உறுதிசெய்யும் விதமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த 'கோம்பை' நாய் இனத்தை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

(i) ஒட்டுமொத்தமாக 15 கால்நடை இனங்கள் மற்றும் கோம்பை நாய் இனத்தை தேர்வு செய்து மத்திய வேளாண் அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டது.

(ii) அதில், 'கால்நடை வளர்ப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டைச் சேர்ந்த 'கோம்பை' நாய் இனம், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த பிரஜ் கழுதை இனம், காஷ்மீரைச் சேர்ந்த குதிரை, ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த பட்டீசி ஆடு இனம், கர்நாடகத்தின் கொப்பல் கால்நடை இனம் உள்ளிட்டவை தேர்வு செய்யப்படுகின்றன. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால்நடைகள் மற்றும் நாய் இனத்தை சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கால்நடை வளர்ப்பு, இனப்பெ ருக்கம், உற்பத்தி, பாதுகாப்பு, பயன்பாடு, நுகர்வு மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பராமரிக்க வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

9.இந்தியாவின் பல்லுயிர்ப் பெருக்க நெருக்கடியும் பாதுகாப்புக்கான செயல்திட்டமும்

(i) பல்லுயிர்ப் பெருக்கத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கம்

- அறிவியல் கண்டுபிடிப்புகளும் தொழில்நுட்ப முன்னேற்றங்களும் மனித வாழ்க்கையை இதுவரை இல்லாத அளவுக்குச் சௌகரியமாக மாற்றியுள்ளன. இருப்பினும், அவை வனவிலங்குகளின் இனப்பெருக்கத்தைப் பெருமளவில் குறைத்துள்ளதுடன், பல தாவர இனங்கள் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்படுவதற்கும் காரணமாகியுள்ளன.
- வனவிலங்குகள் மட்டுமின்றி, மனித வளர்ச்சியின் தாக்கத்தால் புற்கள், மூலிகைத் தாவரங்கள், பூச்சிகள் உள்ளிட்ட மனிதரல்லாத உயிரினங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

(ii) ஐ.யு.சி.என். உலகப் பாதுகாப்பு மாநாடு மற்றும் தேசிய சிவப்புப் பட்டியல் செயல்திட்டம்

- சுற்றுச்சூழல் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நோக்கில், இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (International Union for Conservation of Nature – IUCN), 2025–2026 காலகட்டத்தில் அபுதாபியில் உலகப் பாதுகாப்பு மாநாட்டை நடத்தியது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மாநாட்டில் 1,400-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
- இந்தியாவில், 'தேசிய சிவப்புப் பட்டியல் செயல்திட்டத்தின்' (National Red List Roadmap) கீழ், அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் சுமார் 11,000 உயிரினங்கள் அடையாளம் காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றில் 7,000 தாவர இனங்களும் 4,000 விலங்கு இனங்களும் அடங்கும்.
- 2030-ஆம் ஆண்டுக்குள் அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் அனைத்து தாவர மற்றும் விலங்கு இனங்களையும் பட்டியலிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(iii) இந்தியாவின் வளமான பல்லுயிர்ப் பெருக்கமும் தனித்துவ உயிரினங்களும்

- உலகின் மொத்த நிலப்பரப்பில் வெறும் 2.4 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள இந்தியா, உலகின் மொத்த தாவர இனங்களில் 8 சதவீதத்தையும், விலங்கு இனங்களில் 7.5 சதவீதத்தையும் கொண்டுள்ளது.
- உலகில் அடையாளம் காணப்பட்டுள்ள 36 பல்லுயிர்ப் பெருக்க முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் (Biodiversity Hotspots) 4 இந்தியாவில் அமைந்துள்ளன. மேலும், உலகின் 17 மிக அதிகப் பல்லுயிர்ப் பெருக்கம் கொண்ட பகுதிகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.
- இந்தியாவில் காணப்படும் தாவர இனங்களில் 28 சதவீதமும், விலங்கு இனங்களில் 30 சதவீதமும் இப்பகுதிக்கே உரிய தனித்துவ இனங்களாகும் (Endemic Species). இவை உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இயற்கையாகக் காணப்படுவதில்லை. இதனால், இந்தியாவின் பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்புக்கு ஐ.யு.சி.என். சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது.
- ஐ.யு.சி.என். தரவுகளின்படி, இந்தியாவில் 7,516 உயிரினங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் 1,012 உயிரினங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. தற்போது, மொத்த உயிரினங்களில் 7.2 சதவீதம் மட்டுமே முறையாக அடையாளம் காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பீடு செய்யப்பட்ட உயிரினங்களில் 1,102 இனங்கள் அழிவை எதிர்கொண்டுள்ளன.

(iv) அரசின் முன்னெடுப்புகள் மற்றும் வாழிட மறுசீரமைப்பு

- இந்திய அரசின் 'வனவிலங்கு வாழிடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின்' (Integrated Development of Wildlife Habitats) கீழ், அடையாளம் காணப்பட்ட 24 உயிரினங்களுக்கும் அவற்றின் வாழிடங்களுக்கும் தனிப்பட்ட மீட்புத் திட்டங்களைச் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.
- வாழிடங்களை மறுசீரமைத்தல், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

(v) உயிரின மீட்பு மற்றும் பாதுகாப்பில் வெற்றிக் கதைகள்

- மாபெரும் இந்திய வரகுக்கோழி (Great Indian Bustard): குஜராத்தின் கட்ச் வளைகுடா பகுதியில் மட்டுமே காணப்படும் இந்த அருகிவரும் பறவை இனம், 10 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றிகரமாக முட்டையிட்டு குஞ்சு பொரித்துள்ளது.
- ஆசியச் சிங்கங்கள்: குஜராத்தின் கிர் வனப்பகுதியில் ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை 2020-ஆம் ஆண்டில் 674-ஆக இருந்தது. இது 2025-ஆம் ஆண்டில் 891-ஆக அதிகரித்துள்ளது.
- ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்கள்: அஸ்ஸாமில் உள்ள பொபிடோரா வனவிலங்கு சரணாலயத்தில் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவற்றின் கொம்புகளுக்காக வேட்டையாடப்படும் அபாயத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சங்காய் மான்கள் மற்றும் ஹங்குல் மான்கள்: தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் மணிப்பூரின் ஈரநிலப் பகுதிகளில் காணப்படும் சங்காய் மான்களும், காஷ்மீரின் ஹங்குல் மான்களும் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. பல்வேறு பாம்பு இனங்கள், கீரிகள், பச்சோந்திகள் மற்றும் உடும்புகளும் தீவிரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- பிற உயிரினங்களின் மறுவாழ்வு: மேகாலயாவின் புகைச்சிறுத்தைகள் (Clouded Leopards), இமயமலைப் பனிச்சிறுத்தைகள் (Snow Leopards), நீலகிரி வரையாடுகள் (Nilgiri Tahr), வரிக்குதிரைகள் மற்றும் சிங்கவால் குரங்குகள் (Lion-tailed Macaques) ஆகியவற்றின் எண்ணிக்கையை மீட்டெடுப்பதற்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் உதவியுள்ளன.
- சர்வதேச அளவிலான பாதுகாப்பு முயற்சிகள்: பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளின் கூட்டு முயற்சிகளால், ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலில் காணப்படும் ஐபீரிய லின்க்ஸ் (Iberian Lynx), ஆப்பிரிக்காவில் காணப்படும் வளைந்த கொம்பு ஒரிக்ஸ் மான் (Scimitar-horned Oryx), கஜகஸ்தானில் காணப்படும் சைகா மான் (Saiga Antelope) ஆகிய உயிரினங்களும் அழிவிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.